මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/GPS/13/03/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025.09.13

**தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபம் : 03/2025**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்

**<u>அத்தியாவசிய பொது சேவைகள் மற்றும் களப்பணிகளுக்கான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு குறித்த தகவல்களைக் கோருதல்</u>**

அரசாங்கத்தின் அபிவிருத்திக் கருத்திட்டங்களை விரைவாகவும் திறமையாகவும் செயற்படுத்துவதற்கு, விவசாயம், நீர்ப்பாசனம், காணி, வனவிலங்குகள், வனப் பாதுகாப்பு, உள்ளூர் நிர்வாகம் போன்ற துறைகளில் அபிவருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிலவும் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படல் வேண்டும். இதற்காக, தற்போதுள்ள வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் என்பன தேவையான வசதிகளை வழங்கப் போதுமானதாக இல்லை என்பதுடன், தற்போதுள்ள பெரும்பாலான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் காலாவதியானவை என்பதால் அவற்றை பழுதுபார்ப்பதில் உள்ள அதிக செலவு, தொடர்ச்சியான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தடையாக மாறியுள்ளது. பொது நிறுவனங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு அத்தியாவசிய வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை அவசரமாக கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், மேலும் வாகனங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக முதற்கட்டமாக 2025 இல் டபள்கெப் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

02. அதன்படி, களப் பணிகள் தொடர்பான கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சுக்கள் / மாகாண சபையின் கீழ் செயற்படும் திணைக்களங்கள் அல்லது அரசாங்க நிறுவனங்களில் டபள்கெப் வண்டிகளுக்கான தேவையை, பின்னிணைப்பு 1 இன் விதிகளின்படி, 2025.09.30 இற்கு முன்னர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்கு ஒரு பிரதியுடன், கொம்றோளர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**ஒப்பம்/-**
**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும**
**திறைசேரியின் செயலாளர்**

**பின்னிணைப்பு 01**

## வாகனத் தேவைப்பாடு பற்றிய மதிப்பீடு

(அ) வாகனங்கள் கொள்வனவுக்கான அனைத்து கோரிக்கைகளும் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட இந்த சுற்றறிக்கையின் பின்னிணைப்பு II இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில், தொடர்புடைய நிரல் அமைச்சின் செயலாளர் ஊடாக திறைசேரியின் கொம்றோளர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர், அந்தக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவினால் பின்வரும் அளவுகோல்களின்படி மதிப்பாய்வு செய்யப்படல் வேண்டும்.

(i) வாகனம்/வாகனங்கள் தேவைப்படுவதற்கான காரணங்கள்

(ii) நிறுவனத்தின் வாகனத் தேவைகள் மற்றும் தற்போதைய வாகனத் தொகுதி

(iii) திருத்தி அமைக்கப்பட வேண்டிய வாகனம் / வாகனங்களின் வயது மற்றும் நிலை

(iv) ஏற்கனவே உள்ள வாகனம் / வாகனங்களுக்கான கடந்த 3 ஆண்டுகளுக்கான பராமரிப்பு செலவுகள்

(v) இவ்வாறு கொள்வனவுசெய்வதற்கு முன்மொழியப்பட்ட டபள்கெப் வாகனங்களை அதிகாரிகலுக்கான உத்தியோகபூர்வ வாகனங்களாக ஒதுக்கீடுசெய்வதற்கு பயன்படுத்தக்கூடாது என்பதுடன், அந்த வாகனங்களின் அடிப்படையில் எரிபொருள் கொடுப்பனவும் செலுத்தப்படக்கூடாது.

(vi) 2020.10.02 ஆந் திகதிய 05/2020 ஆம் இலக்க மற்றும் 2022.01.25 ஆந் திகதிய 04/2022 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கைகளின் படி அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை.

(vii) இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட் விதிகள் மற்றும் இந்த மதிப்பாய்வுடன் தொடர்புடைய ஏனைய பிற விடயங்கள்,

(ஆ) அரசாங்க வாகனங்களின் பயனுள்ள பயன்பாட்டை உறுதி செய்வதற்காக, அரச நிறுவனங்களுடன் தொடர்புடைய பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு, சம்பந்தப்பட்ட அமைச்சிலிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் குறித்து கொம்ப்றோளர் ஜெனரல் முறையான ஆய்வை மேற்கொள்வார்.

(i) மீளாய்வுக் குழுவின் பரிந்துரை

(ii) நிறுவன ஏற்பாடுகள்

(iii) வாகனத் தொகுதியிலுள்ள வாகனங்களை அதிகபட்ச பொருளாதார செயற்திறனை பெற்றுக்கொள்ளும் வகையில் பயன்படுத்துதல்.

(iv) அரச நிறுவனத்தின் தற்போதைய வாகனத் தொகுதிக்குள் தேவையை முகாமை செய்துகொள்வதற்கான திறன்.

(இ) மேற்கூறிய விடயங்களைப் பரிசீலித்த பின்னர், கொம்றோளர் ஜெனரல் தனது பரிந்துரைகளுடன் விண்ணப்பத்தை தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பார்.

*Annex II*

**Approval of the Department of National Budget for Procurement of Vehicles.**

1. Name of the Ministry / Department / Pubic Institute ..........................................................................

2. Type of Vehicle/s requested – **Double Cabs**

| Number of Double Cabs | Purpose of purchasing | In case of replacement, details of the dispose vehicle | |
|---|---|---|---|
| | | Year of manufacture | Registration number |
| | | | |

3. Reason/s for the requirement of vehicle/s ..........................................................................................

4. Details of existing vehicles in the Ministry/Department/Public Institution

| Vehicle Type | Number of Vehicles | | | |
|---|---|---|---|---|
| | Age less than 05 years | Age 05-10 years | Age more than 10 years | Availability of Rented/hired Vehicles |
| Sports Utility Vehicle (SUV) | | | | |
| Motor Car | | | | |
| Double Cab | | | | |
| Van | | | | |
| Other (Pl. specify) | | | | |

5. Contact information and recommendation

5.1 Contact Officer's name and telephone no. ..................................................

5.2 Recommendation ..........................................................................................................................

......................................................................

Head of the Department/Institution

Date ..................................................

6.1 Having review at the committee, the following vehicles are recommended.

| Number of Double Cabs | Purpose of purchasing |
|---|---|
| | |

In case of replacement, Register numbers of the Dispose Vehicles to be mentioned ..........................

.......................................................................

Secretary to the Ministry/Chief Secretary

Date ..................................................

6.2 Recommendation of the Comptroller General

Director General,

Department of National Budget

The following vehicles are recommended

| Number of Double Cabs Requested | No of Double Cabs Recommended |
|---|---|
| | |

.......................................................................

Comptroller General

Office of Comptroller General

Date ..................................................